


தென்காசி மாவட்டம் – சங்கரன்கோவில் தொகுதிக்கு உட்பட்ட சின்ன கோவிலாங்குளத்தில் ரூபாய் 1.52 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வெள்ளாட்டின ஆராய்ச்சி மையத்தினை மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தனுஷ் எம் குமார் எம்.பி.சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ. மாவட்ட பொருளாளர் சரவணன்,ஒன்றிய செயலாளர் பெரியதுரை,தமிழ்செல்வி, ஆறுமுகசாமி உள்பட பலர் உள்ளனர்.



நெல்லை கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட தி.மு.க. சார்பு அணிகளின் கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,மாநில மீனவரணி துணை செயலாளர் எரிக்ஜூடு, அணி அமைப்பாளர்கள் ஜான் ரபீந்தர்,அலெக்ஸ் அப்பாவு, மல்லிகா அருள்,அந்தோணி ஆல்வின் பிரேமா,மாடசாமி, ராஜாசங்கரலிங்கம், சுப்பிரமணியன், நெடுஞ்செழியன்,கார்த்திக் குமார்,அருணன்.முருகன், பாலசந்தர்,திருப்பதி ஜெயசீலன்,முருகன்,பீர்முகமது, பிரகாஷ்,அன்வர் உசேன்,பிரேம் ஆனந்த் ஆகியோர் உள்ளனர்.

### தென்காசி மாவட்டம்

# கீழப்பாவூர் ஊராட்சியில் கால்நடை சுகாதார - விழிப்புணர்வு முகாம்!

## அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார்!

தென்காசி.செப்.25-

தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை தென்காசி மாவட்டம் சார்பில் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் குறும்பலாபேரி ஊராட்சியில் வைத்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம் துவக்க விழா நிகழ்வில் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா. ஆர்.இராதாகிருஷ்ணன் பங்கேற்று ரூ.176.7 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 4 கால்நடை மருந்தக கட்டிடங்களை திறந்து வைத்தார்.

கால்நடை பராமரிப்பு துறை தென்காசி மாவட்டம் சார்பில் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் குறும்பலாபேரி கிராமத்தில் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம் துவக்க விழா,புதிய பார்வை கால்நடை மருந்தகம் மற்றும் பார்வை கிளை நிலையம் துவக்க விழா,புதிதாக கட்டப்பட்டுள்ள 4 கால்நடை மருந்தக கட்டிடங்கள் திறப்பு விழா நிகழ்வு மாவட்ட ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன் தலைமையில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம் குமார்,பழனி நாடார் எம்.எல்.ஏ.மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி போஸ்,கீழப்பாவூர் ஒன்றிய குழு தலைவர் காவேரி சீனித்துரை, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பேராசிரியர் சாக்ரடீஸ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நெல்லை மண்டல கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் தியோபிலஸ் ரோஜர் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் பங்கேற்று ரூபாய் 176.7 லட்சம் மதிப்பில் மாறாந்தை, வல்லம்,ஆய்க்குடி,பொட்டல் புதூர் ஆகிய 4 புதிய கால்நடை மருந்தகங்களை திறந்து வைத்தார்.மற்றும் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் நிதியின் மூலம் கட்டப்பட்ட அரியப்பபுரம் பார்வை கால்நடை மருந்தகம் (கிளை நிலைய கட்டிடம்) கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் அரியப்பபுரம் கிராமத்தில் புதிய பார்வை கால்நடை மருந்தகம் மற்றும் புல்லுக்கட்டு வலசையில் பார்வை கிளை நிலையம் ஆகியவற்றையும் துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில்,உத்தரவின்படியும் தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை சார்பில் சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகள் குறித்த விளக்கங்களையும், செயலாக்கங்களையும்,மருத்துவ சேவைகளையும் விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே வழங்கும் விதமாக தமிழ்நாட்டில் 7760 சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டு,தென்காசி மாவட்டத்தில் ஒரு ஊராட்சி ஒன்றியத்துக்கு 20 முகாம்கள் வீதம் 10 ஊராட்சி ஒன்றியத்திற்கு 200 முகாம்கள் நடத்தப்பட உள்ளது.ஒரு முகாம் நடத்த ஆகும் மொத்த செலவு ரூபாய் 10,000ம் வீதம் 200 முகாம்களுக்கான மொத்த செலவு ரூபாய் 20,00,000 ம் ஆகும்.

**தமிழ்நாட்டில் நடைபெறும் முதல் முகாம்!**

இன்று புதிதாக தோற்றுவிக்கப்பட்ட கால்நடை மருந்துகள் மற்றும் துவக்கப்பட்ட முகாம்கள் மூலம் தென்காசி மாவட்டத்தில் உள்ள கால்நடைகள் பயனடையும். மேலும் இன்று குறும்பலாபேரி கிராமத்தில் நடைபெற்ற முகாமில் சுமார் 700க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி செலுத்துதல்,குடற்புழு நீக்கம் செய்தல், சிகிச்சை,செயர்க்கை முறை கருவூட்டல், சினை பரிசோதனை,மலடுநீக்க சிகிச்சை போன்றவை மேற்கொள்ளப் பட்டன. மேலும் கன்று மேலாண்மை, சினைமாடு மேலாண்மை,கறவைமாடு மேலாண்மை, தீவன மேலாண்மை போன்றவை குறித்த விழிப்புணர்வு கால்நடை வளப்போரிடையே ஏற்படுத்தப்பட்டது,சிறந்த முறையில் கால்நடை வளர்ப்போருக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. மேலும் பால் உற்பத்தியை அதிகரிக்க மற்றும் சினை பிடிப்பதற்கு தேவையான சத்துக்கள் அடங்கிய தாது உப்புகளும் வழங்கப்பட்டது.இந்த சிறப்பு முகாம்கள் மூலம் தொலைதூரக் கிராமங்களில் உள்ள கால்நடைகள் மற்றும் மக்களும் பயன்பெறுவார்கள்.

முதலமைச்சர் அவர்கள் எல்லோரும் எல்லாம் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் எல்லாத் துறைகளும் சிறந்து விளங்க வேண்டும் என்று செயல்பட்டு வருகிறார்கள்.கால்நடை பராமரிப்பு துறையும் மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் பொருட்டு கால்நடை மூலம் கிராமங்களில் பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்தியுள்ளார்கள். விவசாயிகளும், கால்நடைகளும் சேர்ந்து பயணிக்கும் துறையாக இது உள்ளது.

முதலமைச்சரின் வரும் முன் காப்போம் திட்டம் போன்று ,2000ம் ஆண்டு முதல் முறையாக கால்நடை பராமரிப்பு முகாமை உருவாக்கியவர் கலைஞர் அவர்கள். அதனைத் தொடர்ந்து அரசு செய்து வருகிறது.2 பசுமாடு இருந்தால் குடும்பமே உயர்வு பெறுகிறது. கால்நடைகளான ஆடு,மாடு,கோழி போன்றவை நோய் வராமல் பாதுகாக்க கூடிய உத்தரவை முதல்வர் அவர்கள் வழங்கி உள்ளார்கள்.ஆட்டின ஆராய்ச்சி மையம், நாயின ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நாட்டுக்கோழி குஞ்சுகள் தட்டுப்பாடு பற்றி தெரிந்ததும்,நாட்டினக் கோழிகளை அபிசேகப்பட்டினம், காரைக்குடி ஆகிய பகுதிகளில் நாட்டு குஞ்சுகளை உருவாக்கி உற்பத்தி செய்து வருகிறோம். ஊட்டியில் மாடுகளுக்கு சினை ஊசி ரூபாய் 675 க்கு போடப்படுகிறது.அதனை 175 க்கு இங்கு போடப்பட்டு வருகிறது.பால் உற்பத்தியை அதிகப்படுத்த இதனை செய்துள்ளோம். இன்று சரியான நேரத்தில் சரியான மருந்துகள் கொடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. அதற்கான பயிற்சி கொடுக்கும் வகையில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

வாய் நோய் தடுப்பூசி கடந்த ஆண்டுகளில் தட்டுப்பாட்டில் இருந்தது.முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதும் ஒன்றிய அரசிடம் இருந்து 90 லட்சம் மருந்துகள் பெற்றுள்ளோம்.மாடு, ஆடு, கோழி களுக்கு நோய் இல்லை என்பதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம்.

முதலமைச்சர் அவர்களின் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் மூலம் ஒரு கோடிக்கு மேற்பட்ட மக்கள் பயன் பெற்றுள்ளனர்.இதன் மூலம் மக்களை பாதுகாத்திடும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறு அமைச்சர் அனிதா. ஆர்.இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ் உமரிசங்கர்,தூத்துக்குடி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராமஜெயம்,வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வகுமார் நல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் பரிசமுத்து, தலைமை செயற்குழு உறுப்பினர் செந்தூர் மணி, ரகு,கிருபாகரன்,கபடி கந்தன்,ஒருங்கிணைந்த தென்காசி மாவட்ட பொருளாளர்கள் ஷெரீப், இல. சரவணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆறுமுகசாமி, செல்லத்துரை,சேக்தாவுது,சேசுராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் அருள் ரஹீம், ஒன்றிய செயலாளர்கள் சீனித்துரை, அன்பழகன், அழகு சுந்தரம், செல்லதுரை,ஜெயக்குமார், மகேஷ் மாயவன்,சிவனு பாண்டியன், சேர்மதுரை, ஒன்றிய குழு தலைவர்கள் திவ்யா மணிகண்டன் (ஆலங்குளம்) சேக் அப்துல்லா (தென்காசி) நகர் மன்ற தலைவர் மூப்பன் கபீபூர் ரகுமான் (கடையநல்லூர்)மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வேலுச்சாமி, குறும்பலாபேரி ஊராட்சி மன்ற தலைவர் முத்துமாலையம்மன் மதிசெல்வம், ஒன்றிய குழு துணை தலைவர் முத்துக்குமார்,ஒன்றிய குழு உறுப்பினர்கள் முருகேசன், புவனா, உள்பட குறும்பலாப்பேரி ஊராட்சி மன்ற உறுப்பினர்கள்,கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் தென்காசி கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் மகேஸ்வரி நன்றி உரையாற்றினார்.

**காமராஜர் சிலைக்கு மாலை அணிவிப்பு!**

முன்னதாக கீழப்பாவூரில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி னார்.

பின்னர் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தொகுதி மேலநீலிதநல்லூர் ஒன்றியம் சின்னக்கோவிலான்குளத்தில் ரூபாய்1.52 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள வெள்ளாட்டின ஆராய்ச்சி மைய கட்டிடத்தினை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் ரவிச்சந்திரன்,தனுஷ் எம் குமார் எம்.பி. தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ. கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் பதிவாளர் டென்சிங் ஞானராஜ்,கால்நடை உற்பத்தி கல்வி மையம் இயக்குனர் முனைவர் மீனாட்சி சுந்தரம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தமிழ்ச்செல்வி, மேலநீலித நல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரியதுரை உள்பட பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாநகர அலுவலகத்தில் மாநகர இலக்கிய அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் துணைச் செயலாளர் அப்துல் கையூம், நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் முன்னிலையில் நடைபெற்றது.நிகழ்வில் மாநகர இலக்கிய அணி தலைவர் ராஜேஸ்வரி, துணைச் செயலாளர் நர்மதா திலக், மாநகர அமைப்பாளர் நச்சினார் இனியன், துணை அமைப்பாளர்கள் வைரமணி, நயினார், சுந்தரம், ராமச்சந்திரன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! மானாமதுரையில்

# கழக இலக்கிய அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் கருத்தரங்கம்!

## முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை.செப். 25-

சிவகங்கை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு ஒன்றிய, நகர பேரூர்க் கழகங்களின் சார்பிலும், பல்வேறு அணிகளின் சார்பிலும் கருத்தரங்கம் பொதுக்கூட்டம் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்று வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக சிவகங்கை மாவட்ட கழக இலக்கிய அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் விழா கருத்தரங்கம் மானாமதுரை அனுசுயா மகாலில் மாவட்ட கழகச் செயலாளரும் , கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே ஆர். பெரிய கருப்பன் தலைமையில் மாவட்ட திமுக இலக்கிய அணி தலைவர் புலிக்குத்தி சீனிவாசன், துணை தலைவர் ஆண்டணி சேவியர்,மாவட்ட துணை அமைப்பாளர்கள் ச.சுப்பிரமணியன், ம.ராதாகிருஷ்ணன், மு.சுப்பிரமணியன், க. ராஜ பாண்டியன், அழகையா, ஒன்றிய, நகர, அமைப்பாளர்கள், மோகனசுந்தரம், என். எஸ். மாணிக்கம், கே ஆர் . அக்னி ராஜ் ,ஆர். ரமேஷ், திருமலை மணிமாறன், சரவணன், ஆ.மகேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் சிவ. முத்துவளவன் வரவேற்புரை ஆற்றினார் கருத்தரங்கினை தொடங்கி வைத்து முன்னாள் அமைச்சரும் மாநில திமுக இலக்கிய அணிபுரவலருமான மு.தென்னவன் அண்ணன் சிறப்புரையாற்றினார்.

மாநில இலக்கிய அணி இணை செயலாளர் கவிஞர் ஈரோடு இறைவன் மறக்க முடியுமா மறுக்க முடியுமா என்ற தலைப்பிலும், தமிழரசி ரவிக்குமார் எம் .எல். ஏ. சொல்லும் செயலும் என்ற தலைப்பிலும் ,திராவிட இயக்க தமிழர் பேரவை கொள்கை பரப்பு செயலாளர் திருமதி இரா.உமா மீட்சியும் புரட்சியும் என்ற தலைப்பிலும், முனைவர் சீ. பாண்டி சக்தி பேனாவும் செந்நாவும் என்ற தலைப்பிலும், கருத்தரங்கத்தில் பங்கேற்று பேசினார்கள்.

கிழக்கு ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் வேல்முருகன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு திருக்குறள் நூல்கள் வழங்கியும், அரசுப்பள்ளிகளில் 1000மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை துவக்கி வைத்தும் , நலத்திட்ட உதவிகள் வழங்கி மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் பேசியதாவது.

தலைவர் கலைஞர் பன்முகத்தன்மை கொண்டவர். அவர் ஐந்து முறை தமிழக முதல்வராக இருந்த போது அவரால் நிறைவேற்றப்பட்ட மக்கள் நலத்திட்டங்கள் ஒவ்வொரு வீட்டிலும் ஒருவருக்காவது கிடைத்திருக்கும்.தனது வாழ்நாள் முழுவதும் தமிழ் இனம்,மொழி,கலாச்சாரத்திற்காக அர்ப்பணித்தவர். இந்தியாவிலேயே அனைத்து அரசியல் தலைவர்களால் மதிக்கப்பட்ட தலைவர். அத்தகைய தலைவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதாகும் .அவரது புகழ் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நிலைத் து நிற்கும்.

இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர். தா. ராமையா, மாவட்ட கழக துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன், கே. எஸ். எம். மணி முத்து, முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன்

எஸ். மாரியப்பன் கென்னடி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், நகர் கழக செயலாளர்கள் க.பொன்னுச்சாமி, பெரி. பாலா, ஒன்றிய செயலாளர்கள் துரைராஜாமணி, எம். அண்ணாத்துரை, மானாமதுரை ஒன்றிய குழு திருமதி லதா அண்ணாதுரை துணை தலைவர் முத்துச்சாமி,. பொதுக்குழு உறுப்பினர்கள் கு .ராஜாங்கம், தெய்வானை இளமாறன்,நகர்மன்ற துணைத்தலைவர்பாலா சுந்தர் காரைக்குடி நகர கழக செயலாளர் என். குணசேகரன் நிர்வாகிகள் காளியப்பன் கலை இலக்கியபகுத்தறிவுதலைவர் திரு நாவுக்கரசு, பேரவை அமைப்பாளர் சண்முகநாதன்,

மாவட்ட மீனவரணி தலைவர்பாஸ்கரன், துணை அமைப்பாளர் அண்ணாமலை, மாவட்ட தொண்டரணி தலைவர். கா.மூர்த்தி, தொழிலாளரணி மாவட்ட துணை அமைப்பாளர் புவியரசு விவசாய அணி காளிமுத்து, நிர்வாகிகள் ரவிச்சந்திரன், மகளிர் அணி சண்முகப்பிரியா, சத்யாராஜா, தா. இரா. நெடுஞ்செழியன், சந்திரசேகரன், சோனை முத்து, சமய முத்து, மாரி கண்ணன், கார்த்தி, சேவியர், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், தொண்டரணி துணை அமைப்பாளர் புலிக்குட்டி, ஊராட்சி மன்றத் தலைவர் சமயமுத்து உட்பட பல்வேறு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் சிவ. முத்துவளவன் தலைமையில் நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

### மாவட்டக் கழக பொறியாளர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா!

# தென்காசி தெற்கு மாவட்டத்தில் பொறியியல் பிரிவு மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி!

## 3 சட்டமன்றத் தொகுதிகளில் 2 நாட்கள் நடைபெறுகின்றது!

தென்காசி.செப்.25-

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 3 சட்டமன்ற தொகுதிகளில் நாளை (26.09.2023) நாளை மறுநாள் (27.09.2023) ஆகிய 2 நாட்கள் மாவட்ட திமுக பொறியாளர் அணி சார்பில் பொறியியல் பிரிவு மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ஆலோசனையின் பேரில் நடைபெறுகிறது.

மாநில அளவில் நடைபெறும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவமாணவிகளுக்கு முதல் பரிசாக ரூபாய் 5 லட்சம் பரிசு வழங்கப்படுகிறது.

தென்காசி தெற்கு மாவட்டத்தில் ஏற்பாடுகளை தென்காசி தெற்கு மாவட்ட பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் செல்வகுமார், மாவட்ட தலைவர் தங்க பாண்டியன், துணை அமைப்பாளர்கள் மணிகண்டன், ஷாகிர் உசேன், சிவராஜன்,தயாபொன் ஆனந்த்,ஆல்பின்ராய் உள்ளிட்ட நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

அதன்படி தென்காசி தெற்கு மாவட்டத்தில் உள்ள தென்காசி, கடையநல்லூர்,ஆலங்குளம் ஆகிய 3 தொகுதியில் உள்ள பொறியியல் பிரிவை சார்ந்த மாணவமாணவியர்கள் பங்கு பெறலாம்.

பேச்சுப் போட்டிக்கான தலைப்புகள் விவரம் வருமாறு:-

தொழில்நுட்பக் கல்விக்கு தோள் கொடுத்த கலைஞர், தொழில்துறையை உயர்த்திய தமிழினத் தலைவர்,திராவிட மாடலும் திறன்மிக்க கல்வியும், தெற்கு சூரியன் கலைஞரும் தமிழும் என்ற தலைப்புகளில் பேச்சு போட்டிகள் நடைபெறுகிறது.

நாளை 26.09.2023 காலையில் (பொறியியல் டிப்ளமோ ஐ.டி.ஐ) ஆலங்குளம் தொகுதிக்கு மரியம் பாலிடெக்னிக் கல்லூரியிலும்.

27.09.2023 அன்று கடையநல்லூர் தொகுதிக்கு காலை 10 மணிக்கு ஆய்க்குடி ஜெ.பீ. பொறியியல் கல்லூரியிலும்,தென்காசி தொகுதிக்கு மதியம் 2 மணிக்கு தென்காசி செந்தில் ஆண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியிலும் நடைபெறுகிறது.

இந்த தொகுதி வாரியாக போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளை பெற்ற மாணவர்மாணவியர்கள் மண்டல வாரியாக நடைபெறும் போட்டியில் கலந்து கொண்டு அதில் வெற்றி பெற்றவர்கள் மாநில அளவில் நடைபெறும் பேச்சு போட்டியில் கலந்து கொண்டு பரிசுகளை பெறலாம்.

மாநில அளவில் நடைபெற்ற போட்டியில் வெற்றி வரும் மாணவ - மாணவியர்களுக்கு முதல் பரிசாக ரூபாய் 5 லட்சம் வழங்கப்படுகிறது.

இதனை பொறியியல் கல்லூரியில் பயிலும் மாணவமாணவிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி வெற்றி பெற வேண்டும்.




இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (23.09.2023) திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறை சுற்றுலாத்துறையுடன் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்துள்ள புரட்டாசி மாத வைணவத் திருக்கோயில் ஆன்மிகச் சுற்றுலாவினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் ஆணையர் க.வீ.முரளீதரன், இணை ஆணையர்கள் திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி ஐ.முல்லை மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.